# நிலப் பிரபுக்களின் களஞ்சியத்தில் நெல்மணிகள்!

REGD. No. M. 6311 PHONE No. 55630

# நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu": A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F

தனி இதழ்: ஒரு அணா
இலங்கையில் 10 சதம்

சென்னை: ஆவணி மீ 24உ வியாழன் (9—9—54)
வெளியூர்: ஆவணி மீ 25உ வெள்ளி (10—9—54)

மலர்: 2
இதழ்: 75

## சென்று தேயும் நிலை மாற வேண்டும்

## விஞ்ஞான முத்திரை பொறிக்கப்பட வேண்டும்

## உழவர்கள் வாழ்வின் ஒளி பற்றி அண்ணாதுரை

தொழிலில் அக்கறை வளர திட்டங்கள் தேவை

## நிலங்களை பிரித்துத் தருவது அவசியம்

## குறைந்த உழைப்பில் அதிக பலன் காணும் வழிமுறைகள்

### பல்லடம் உழவர் மாநாட்டில் பொதுச்செயலாளர் கருத்துரை

"இன்று, உழவுத் தொழில் நம் நாட்டைப் பொறுத்த வரையில், இலாபகரமானதாக இல்லை; இதற்குக் காரணம் என்ன?

'உழவுத் தொழில் இன்னமும் பெருமையுள்ள ஒரு தொழிலாக இல்லாது இருப்பானேன்?

"இந்த நாட்டில், ஒரு ஏக்கர் நிலத்தில் கிடைக்கும் உற்பத்திப் பொருள், வேறு பல நாடுகளில் இதே அளவு நிலத்தில் கிடைக்கும் உற்பத்திப் பொருள்களைக் காட்டிலும் பல மடங்கு குறைவாக இருக்கிறது—இதற்குக் காரணம் என்ன?

"இந்த நாட்டு உழவர் பெருமக்கள் சரியாக உழைப்பதில்லையா என்றால், அப்படி அல்ல; வேறு நாட்டவரைக் காட்டிலும், இந்த நாட்டவர்தான் கடுமையாக உழைக்கிறார்கள்; அதிலும், கோவை மாவட்டம் போன்ற இடங்களில் நிலத்தை உழுது பயிரிட்டுப் பலனடைவது என்பது, 'கல்லிலிருந்து நார் உரிப்பதை'ப் போன்றதாகும்! பருக்கைக் கற்களும், முட்புதர்களும், காம்புக் காடுகளும் நிறைந்த இந்த மாவட்டத்தில், உழவரின் உழைப்பு அளவிட முடியாதது! அப்படி எல்லாம் உழைத்தும், நல்ல வருமானமும், வளமும், பலனும் இல்லாமற்போவானேன்?

"வேறு பல மேல்நாடுகளில், உழவுத் தொழிலுடன் அவர்கள் விஞ்ஞானத்தையும் கலந்துகொண்டு வேலை செய்கிறார்கள்; அதனால் அவர்கள் குறைவாக உழைத்தாலும், நம்மைக் காட்டிலும் அதிகமான பலன் பெறுகிறார்கள்,

"வெள்ளியை உருக்கி, நாணயமாக நாம் அடிக்க முடியாது; அதற்கு, சர்க்கார் முத்திரை போடப்படும் போதுதான் வெள்ளி, ரூபாயாக மதிப்பிடப்படுகிறது—நாட்டிலே உலவுகிறது; அதைப் போலவே, உழவுத் தொழில் நன்கு மதிப்பிடப்பட, நல்ல பலன் தர, விஞ்ஞான முத்திரை அதனுடன் பொறிக்கப்பட வேண்டும்!

"நம்முடைய நாட்டிலே நாம் விஞ்ஞான அறிவைப் பெருக்கிக்கொண்டு, உழவுத் தொழிலையும் அந்த விஞ்ஞானத்துடன் செய்தால்தான் குறைந்த உழைப்பில் நிறைய பலன் பெற முடியும்,"

—என்று, பல்லடத்தில் நடைபெற்ற கோவை மாவட்ட உழவர் மாநாட்டில் 5—9—54 அன்று மாலை தி. மு. கழகப் பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்கள் ஆற்றிய உரையில் குறிப்பிட்டார். மேலும் அவர் சொன்னார்:—

"ஐரோப்பாவில் உள்ள டென்மார்க் போன்ற நாடுகளில், பசுமாடு கூட்டத்தையும், பசும் புல் தரையையும் வைத்துக்கொண்டே, வையம் வியக்க வாழ்கிறார்கள்; அந்த நாட்டவர்கள், பசுமாடுகளைப் பேணி வளர்த்து, பால் கறந்து, பாலாடை எடுத்து, விஞ்ஞான ரீதியாக அதைப் 'பாகம்' செய்து, பல நாடுகளுக்கும் தந்து, அந்த வருமானத்தைக் கொண்டே வாழ்கிறார்கள்; அந்த நாட்டு மக்கள் நல்வாழ்வு வாழ, அவர்களுக்குக் கிடைத்திருக்கிற சொத்துக்கள், பசுக் கூட்டம், பசும் புல் தரை ஆகியவைகளேதான்! ஆனால், இந்த நாட்டில், தங்கம் முதல், எல்லா உலோகங்களும், கனிப் பொருள்களும், நில வளமும், நீர் வளமும் ஆகிய எல்லா வளங்களுமிருந்தும், நிலத்தில் இறங்கி உழைக்கும் உழவர்களுக்கு மூன்று வேளை உணவும், ஒண்டக் குடிசையும் உடுத்த உடையும் கிடைப்பதில்லை.

"இதை எல்லாம் எண்ணிப் பார்த்தால், உழவுத்

(4-ம் பக்கம் பார்க்க)

சீட்டோ:

## பசிபிக் கொள்கை வெளியிடப்படும்

### பாகிஸ்தானும் வலையில் சிக்கியிருக்கிறது!

மணிலா, செப். 8—

தென் கிழக்கு ஆசிய ஒப்பந்த நாடுகள் (சீட்டோ) கூட்டுத் தற்காப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.

இந்த நாடுகள் 'பசிபிக் சாசனம்' என்ற பெயரில் தங்கள் கொள்கையை வெளியிட சம்மதித்திருக்கின்றன.

பிரிட்டன், அமெரிக்கா, பிரான்ஸ், ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, பாகிஸ்தான், பிலிபைன்ஸ், தாய்லாந்து ஆகிய நாடுகள் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.

லாவோஸ், கம்போடியா சம்பந்தமாக ஒப்பந்தத்தில் தனி பிரிவு ஒன்று சேர்க்கப்பட்டிருக்கிறது. ஹாங்காங், பார்மோசா இதில் சேர்க்கப்படவில்லை.

மலேயாவும், பிரிட்டிஷ் போர்னியோவும் 'பிணையப் பிரதேசங்கள்' என்ற பெயரில், இந்த ஒப்பந்தத்தில் சேர்க்கப்படும் என்று தெரிகிறது.

இப்போது கையெழுத்திட்டிருக்கிற நாடுகளின் சர்க்கார்கள், இந்த ஒப்பந்தத்தை மீண்டும் ஊர்ஜிதம் செய்ய வேண்டியிருக்கின்றன. 'சீட்டோ' கவுன்சிலின் அடுத்த கூட்டம் அடுத்த வசந்த காலத்தில் கூடும் என்று தெரிகிறது.

பாதுகாக்கப்பட வேண்டிய பிரதேசமெனில், அதில் எந்த ஆசியப் பங்காளியின் முழு பிரதேசமும் சேரும் என்று 'சீட்டோ'வின் ஷரத்து ஒன்று கூறுகிறது.

கிழக்கு பாகிஸ்தானோ அல்லது மேற்கு பாகிஸ்தானோ இதில் எது தாக்கப்பட்டாலும் இந்த ஒப்பந்தம் செல்லுபடியாகும் என்பதுதான் இந்த ஷரத்தின் நோக்கம் என்று தெரிகிறது.

மேட்டோ:

## அமெரிக்கக் கூட்டணியில் எகிப்து சேரும்

### மேற்கத்திய ராஜீய வட்டாரங்கள் கருத்து!

அங்காரா, செப். 8—

மத்திய கிழக்கின் பாதுகாப்பிற்காக அமெரிக்கா, துருக்கி, பாகிஸ்தான் ஆகிய நாடுகளுடன் எகிப்து ஒரு பாதுகாப்பு ஒப்பந்தத்தில் சேருமென்று துருக்கி மேற்கத்திய நாடுகளின் இராஜீய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அமெரிக்காவின் ஒத்துழைப்புடன் நடைபெறும் பாதுகாப்பு அமைப்பு ஒன்றில் எகிப்து சேர்வது காலப் போக்கினைப் பொறுத்த செய்தி என்றாலும் இது உலக நிலையில் ஒரு முக்கிய முன்னேற்றம் என்றும் மேற்கத்திய இராஜீய வட்டாரங்கள் விவரிக்கின்றன.

## சீனா பற்றி பயம் தேவையில்லை!

### வல்லரசுகளுக்கு அட்லியின் அறிவுரை

சிட்னி, செப் 8—

பிரிட்டிஷ் தொழிற் கட்சித் தலைவர் அட்லியும், அவரது மனைவியாரும் ஆஸ்திரேலியாவுக்கு வந்து சேர்ந்திருக்கின்றனர்.

டார்வினில், நிருபர்களிடம் பேசுகையில், அவர் கூறியதாவது:—

"செஞ்சீனாவைப் பற்றி நாம் ஏதும் கவலைப்படத் தேவையில்லை; சீனா, தனது மக்களின் முன்னேற்றத்தில் மிகவும் அவசரமாகக் கவனம் செலுத்தி வருகிறது! பிரிட்டிஷ் காமன்வெல்த்தோ, அல்லது அமெரிக்காவோ சீனாவைப் பற்றி பயமேதும் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை," என்றார்.

நேட்டோ:

## ஆங்கில நாடுகள் கோணல் புத்தி!

### போர்ச்சுகீசிய இந்தியா பற்றி விவாதிக்கலாம்!

### ஆனால் நடவடிக்கை எடுக்க முடியாதாம்!

வாஷிங்டன், செப். 8—

இந்தியாவில் உள்ள போர்ச்சுகீசிய பகுதிகள் சம்பந்தமாக ஆலோசிக்குமாறு வட அட்லாண்டிக் ஒப்பந்தக் கவுன்சிலைக் கேட்கலாம் என்று பிரிட்டன், கனடா அமெரிக்கா ஆகிய நாடுகள் இந்திய சர்க்காருக்கு தெரிவித்திருக்கின்றன என்று தெரிகிறது.

ஆனால், இப்பிரதேசங்களில், போர்ச்சுகீசிய ஆட்சியைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்குமாறு போர்ச்சுக்கல், 'நேட்டோ' நாடுகளை வற்புறுத்த முடியாது என்று கூறப்பட்டிருக்கிறது.

கோவா பற்றி வட அட்லாண்டிக் ஒப்பந்தத்தின் நிலையை, கனடியப் பிரதமரும், போர்ச்சுக்கல் பிரதமரும் மாறுபட்ட கருத்துக்களை வெளியிட்டனர்.

இப்பிரச்சினைக்கும், 'நேட்டோ'வுக்கும் சம்மந்தமில்லை என கனடியப் பிரதமரும், நிலைமை பற்றி ஆலோசிக்க 'நேட்டோ'வைக் கேட்கலாம் என்றும் போர்ச்சுக்கல் பிரதமர் சலாசரும் கூறினார்கள்.

இருவரும் முறையே, 'நேட்டோ'வின் 5, 4-வது ஷரத்துக்களை ஆதாரம் காட்டினர்.

இந்த முரண்பாடு பற்றிய நிலைமையை விளக்குமாறு இந்திய சர்க்கார் கேட்டுக்கொண்டதின் பேரில் மேற்படி நாடுகள் பதில் அனுப்பி உள்ளன.

கனடா, முன் சொன்ன கருத்தை மாற்றிக்கொண்டு போர்ச்சுகீசிய இந்தியா, போர்ச்சுக்கலின் ஒரு பகுதிதான் என்றும், போர்ச்சுக்கல் விரும்பினால், அதுபற்றி 'நேட்டோ' நாடுகள் விவாதிக்கலாம் என்றும் கனடா இப்போது கூறுகிறது.

# நாட்டிற்கு நன்மை செய்யாத பதவி!

## மற்றவர்களுக்கு வழிகாட்டியாக சர்க்கார் இயங்க முடியவில்லை!

### கிரியின் இராஜினாமா கடிதம் சொல்லும் சோகச் செய்தி!

"சில காலமாகவே என்னுடைய சேவைகள், தற்போதைய அமைப்புமுறைகள் மூலம், தொழிலாளர்களுக்கோ, நாட்டிற்கோ, அல்லது உங்களுக்கோ நன்மை பயக்கும் தன்மையுடையது அல்ல என்பதை நான் உணர்ந்து வருகிறேன்;

"தொழில் உறவு மசோதாவைத் தயாரிக்கும்போது

(4-ம் பக்கம் பார்க்க)

பிரெஞ்சிந்தியா:

### விரைவில் முடிவேற்படும்

புதுச்சேரி, செப். 8—

பிரெஞ்சிந்தியாவின் எதிர்காலம் பற்றி, இந்திய சர்க்காருக்கும், பிரெஞ்சு சர்க்காருக்கும் இடையே விரைவில் முடிவு ஏற்படும் என்று தெரிகிறது.

அடுத்த இரண்டு வாரங்களுக்குள் நல்லதோர் ஏற்பாடு நடைபெறுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

# நம் நாடு

தி.மு.க.வின் இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 9—9—54 வியாழன்


# நிலை உயரும் மார்க்கம்!

“நாட்டிலே, படித்துப் பட்டம் பெற்று, வேலையின்றி இருக்கும் வாலிபர்களே, குறைந்த சம்பளத்தில் நியமியுங்கள்; ஒவ்வொருவருக்கும் தனித் தனியாக சில கிராமங்களைப் பிரித்துக் கொடுங்கள்; தாழ்த்தப்பட்டோர் நிலை உயர அவர்கள் பிரச்சாரம் செய்யட்டும்; தீண்டாமை என்பது சமூகத்திற்கே பெரும் அவக்கேடு என்பதை உயர் ஜாதி எனப்படும் மக்களுக்கு எடுத்துச் சொல்லி, அவர்களிடையே ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக நீடித்துவரும் மனமயக்கத்தைப் போக்கட்டும்!”

தீண்டாமை ஒழிப்புப் பற்றிய விசாரணை அதிகாரியின் அறிக்கைமீது, இந்திய மக்கள் சபையில் நடைபெற்ற விவாதத்தில் பேசிய அம்பேத்கார், இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறார்.

‘படித்த வாலிபர்களை சமூக இழிவைப் போக்கப் பயன்படுத்த வேண்டும்’—பயனுள்ள வாதம்; நடைமுறையில் மிகவும் கடினமாகத் தோன்றும், இந்தக் கருத்து!

மக்களிடையே காணப்படும் சமூக அநீதிகளையும் ஜாதி சமயக் கொடுமைகளையும் போக்கவும், ஆண்டான்—அடிமை மனப்பான்மையுடன் வாழும் மக்களின் உள்ளத்திலே ஊறிப்போயிருக்கும் ‘மன மயக்கத்தைப்’ போக்க பிரச்சாரம் செய்யவும் படித்த வாலிபர்கள் நல்ல முறையில் பயன்படுவார்கள்—படித்த வாலிபர்களிடையே நல்ல பண்புகள் வளர்ந்திருக்குமானால்!

இக்காலத்தில் படித்த வாலிபர்களில் பெரும்பாலானவர்களின் மனப்போக்கு பக்குவப்பட்டதாக இல்லை. சமூக சேவை செய்ய வேண்டுமென்ற எண்ணம் சிலரிடையேதான் காணப்படுகிறது.

நமது நாட்டிலே உள்ள கல்வி முறையின் தன்மையால் ஏற்பட்ட விளைவோ என்னவோ, கல்வி கற்ற இளம் வயதினர் பலர், தங்களுக்கும் பின்னால் ஒரு தாழ்த்தப்பட்ட சமுதாயம், விழிப்பு ஏதும் இன்றி வேதனையுடன் வாழ்கிறது என்பதையோ, அவர்களின் நிலை உயர உழைப்பது, கல்வி கற்ற சமூகத்தின்—உயர்ந்த இடங்களில் நடமாட வாய்ப்பு பெற்றுள்ள வாலிபர்களின் கடமை என்பதையோ பலர் உணர்ந்ததாகத் தெரியவில்லை.

கலாசாலைக் கல்விக்குப் பின்னர், பல வாலிபர்களின் [illegible] மாறிவிடுகிறது. வ[illegible] இடை[illegible] கட்டிய [illegible] [illegible] [illegible] வேண்டுமென்ற மனப்[illegible] மையுடன் காணப்படுகிறார்களேயன்றி, தங்களுக்கு கிடைத்திருக்கிற சலுகைகள், உரிமைகள், வாழ்க்கை வசதிகள் இவைகளில் சிறிதளவு கூடக் கிடைக்காமல், நாட்டிலே ஒரு இன மக்கள் இழிநிலைக்கு ஆளாக்கப்பட்டு வாழ்கிறார்கள்—அவர்களின் முன்னேற்றத்திற்கு ஏதேனும் வழி கிடையாதா என்று எண்ணும் நிலை, படித்தவர்களிடையே காணப்படவில்லை என்பது வருந்தத்தக்கது.

அதே நேரத்தில், இன்று பலர், ‘சமூக சேவை செய்கிறேன்; ஊர்க் கோடியின் கடையும் மக்களின் துயரைத் துடைக்கிறேன்,’ என்று கூறுகிறார்கள்.

ஆண்டிலே சில நாட்களில், அழகாக உடையணிந்து சேரிகளுக்குச் செல்வதும், ஏதோ இரண்டு தெருக்களைச் சுத்தம் செய்வதும், பின்னர் அது பற்றி பெருமையாகக் கூடிப் பேசுவதுமாக அவர்கள் இருக்கிறார்கள்.

அவர்களுக்கெல்லாம், சமூக சேவை என்பது ஒரு பொழுதுபோக்காகவும், சிலருக்கு அது உல்லாசப் பிரயாணமாகவும் இருக்கிறது.

பத்திரிகைகளில் படம் பிடித்துப் போடவும், பாரினில் சிலர் தங்களைப் பற்றி மதிப்புடன் பேசவும், சமூக சேவை, தீண்டாமை ஒழிப்பு, தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றம் என்பவற்றை ஒரு கருவியாகப் பயன்படுத்துவோரும் இருக்கிறார்கள்.

சர்க்கார், தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றத்திற்காகச் செய்யும் சில காரியங்கள், பணம் பாழாகும் நிலையில் முடிந்துவிடுகிறது,

அண்மையில், சென்னை சர்க்காரில் புள்ளி விபரம் ஒன்று கூறினார்கள் — தாழ்த்தப்பட்டோரின் முன்னேற்றத்திற்காக, சென்னை சர்க்கார் பல ஊர்களில் லட்சக்கணக்கில் செலவிட்டு பொது மேடைகள் கட்டினார்களாம். இந்தப் பொது மேடைகள், எதிர்பார்த்த பலனைத் தரவில்லை என்பதற்காக அத்திட்டத்தைக் கைவிட்டுவிட்டதாகக் கூறினார்கள்.

இப்படி தாழ்த்தப்பட்டோர் பிரச்சினைக்காக நாட்டிலே பலர், பலவிதமான முயற்சிகள் எடுத்தும் அவை போதிய பலன் தரவில்லை

ஆனால், திராவிட நாட்டிலே கடந்த முப்பது ஆண்டுகளாக மிகப் பெரியதோர் இயக்கமொன்று சைப்பாது எதும் கருதாமல் இதே காரணத்திற்காக சமூக அநீதிகளைப் போக்க உழைத்து வருகிறது.

பகுத்தறிவு இயக்கம் தோன்றிய நாள்முதல் இந்த நாட்டின் தீண்டாமை ஒழிப்புக்காகவும், தாழ்த்தப்பட்டோரின் முன்னேற்றத்திற்காகவும் நாம் பாடுபட்டு வருகிறோம்.

‘நம்மிடையே ஜாதி வேற்றுமைகள் கூடாது; பிறப்பில், மனிதரிடையே பேதம் கூடாது,’ என்று பிரச்சாரம் செய்திருக்கிறோம்; ‘ஜாதி கெட்டவர்கள்’ என்ற பெயரும் பெற்றிருக்கிறோம்!

ஜாதியின் பெயரால், பத்து கோடி மக்கள் அடிமைகளாய் வாழ்வானேன்? உயர் ஜாதி என்பதால் ஒரு குறிப்பிட்ட வகுப்பார் மட்டும் உயர்வானேன்?—என்று கேட்டிருக்கிறோம்.

இதன் காரணமாக, நம்மை, குழப்பவாதிகள், சூழ்ச்சிக்காரர்கள், நாசம் விளைவிப்போர் என்று பலர் ஏசி இருக்கிறார்கள்!

“இந்து மதமும், இந்து நாகரீகமும், அதன் புராணங்களும் இழைத்த அநீதி இது! இக்கொடுமை ஒழிந்தால்தான், உலகோர் முன்னிலையில் நாம் தலைநிமிர்ந்து நிற்க முடியும்” என்று இந்த நாட்டின் பட்டி தொட்டிகளிலே பகுத்தறிவுப் பிரச்சாரம் செய்தோம்!

“நாஸ்திகர்கள், மதத்தை அழிக்கும் மாபாதகர்கள்,” என்று, உயர் ஜாதியார் எனப்படுவோர் நம் மீது சொல்லம்புகளை வீசினர்!

“ஜாதி ஒழிய வேண்டுமென்றால், அதற்காகக் காரியமாற்ற வேண்டும்; கலப்புத் திருமணங்கள் பல நடைபெற வேண்டும்,” என்று கூறினோம்; நாட்டிலே பல கலப்புத் திருமணங்கள் நடைபெற்றன!

சமுதாயத்திலே, தாழ்த்தப்பட்டோரின் நிலை உயர வேண்டுமென்ற விழிப்பு ஏற்பட்டுவிட்டது!

இந்தப் பணியை செய்வதில் தங்கள் வாழ்நாளை அர்ப்பணித்துக்கொண்டவர்கள், உல்லாச வாழ்க்கையை விட்டுவிட்டு, ஊர் மக்களின் மேன்மைக்காக உழைத்து, கல்லடியும், சொல்லடியும் பெற்றவர்கள் நம்மிலே பலர் உண்டு!

அத்தனை இடையூறுகள் நேர்ந்தபோதும் உறுதியுடன் சமூகப் பணி செய்தவர்களின் தியாகம், இன்று நல்ல பலனை தந்திருக்கிறது!

தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்கென நாம் காரியமாற்றும்போதெல்லாம், மதவாதிகளும், பழமைவிரும்பிகளும் நம்மை எதிர்த்தார்கள்; எவ்வளவு தொல்லை கொடுக்க முடியுமோ அவ்வளவையும் செய்தார்கள்—செய்தும் வருகிறார்கள்!

ஏன்—சில நேரங்களில், நம் மீது தாழ்த்தப்பட்ட இன மக்களின் சிலரிடமிருந்தே எதிர்ப்பு கிளம்பியது!

அவர்கள் முன்னேற்றத்திற்கென சனாதனிகள், மதவாதிகள் ஆகியோர் எதிர்ப்புக்கிடையே நாம் பணியாற்றும் போது, யாருடைய வாழ்க்கை நிலை உயர பாடுபட்டோமோ அவர்களிடமிருந்தே நம்மீது தவறான நோக்குடன், தாக்குதல்கள் சில நேரங்களில் கிளம்பியது!

ஆமோ, யாருடைய எதிர்ப்பையும் பொருட்படுத்தாது திராவிடத்திலே ஜாதி பேதமற்ற சமுதாயத்தை அமைக்க வேண்டுமென்ற குறிக்கோளை மனதில் கொண்டு தொடர்ந்து பணியாற்றுகிறோம்!

இதுபோலவே, உள்ள உரமும், உண்மை நோக்கும், நாட்டு மக்கள் மேன்மையுற வேண்டும் என்ற ஊக்கமும் ஆகியவைகள்தான், தாழ்த்தப்பட்டோரின் நிலை உயர உழைப்போர் அனைவரிடமும் காணப்பட வேண்டும்.

தியாக மனப்பான்மை வேண்டும்! தீர்க்கமாக அவர்கள் விளக்க வேண்டும்! இவை அனைத்தையும் விட மிகமிக அவசியமானது,

தாழ்த்தப்பட்டோரின் உண்மை நிலையை உணர்ந்து கொள்வது!

தாழ்த்தப்பட்டோரின் பிரச்சினை பொருளாதாரமா, சமூக அநீதியா, மதத்தால் ஏற்பட்ட கொடுமையா, மனுநீதி வகுத்த வழியா—எது என்பதை, முதலில் நன்றாக உணர வேண்டும்.

அதன்பின்னர், எதிர்ப்புக்கு அஞ்சாத நெஞ்சு உரம் வேண்டும்!

இத்தனையும் கொண்ட வாலிபர்கள், படித்தவர்கள், பண்புடையவர்கள், பரந்த நோக்கம் கொண்டவர்கள் கிடைக்கிறார்கள் என்றால், அவர்களிடம், தாழ்த்தப்பட்டோர் நிலை உயரும் திட்டங்களை நிறைவேற்றும் பொறுப்பை ஒப்படைக்கலாம்!

திட்டமும் பயன் தரும்! உயர் ஜாதி மக்களிடையே நிலவும் ‘மன மயக்க மூடம்’ மறைந்து போகும்! அடிமை களாய் வாழும் மக்களின் நிலை உயரும் மார்க்கமும் தெரியும்!

# துன்பத்தில் உழலும் உழவர்!

## இன்பத்தில் மிதக்கும் எஜமானர்!

### உழைப்பைச் சுரண்ட அனுமதியாதீர்!

### உழவரிடையே அ. பொன்னம்பலனார்

“உழவர் பெருமக்கள் இன்று பலவகையாலும் கஷ்டப்படுகிறார்கள்; அவர்கள் உழைப்புக்கு ஏற்ற ஊதியம் கிடைக்காது போகிறது; உழைப்பவர்களிடம், அவர்கள் உழும் நிலங்கள் இல்லை; இரத்தத்தை வியர்வையாக்கி, இரவு பகலாக உழைத்து, உருமாறிப் போயிருக்கிற சமுதாயத்தவர்களுக்கு வாழ்வுக்குப் பாதுகாப்பில்லை; அவர்களின் குடும்பத்தைக் கவனிக்க அவர்களால் இயலாமற்போகிறது; இது உழைப்பவர் நிலை; ஆனால், உழைக்காமலேயே வாழுபவர்களோ, வாழ்வின் எல்லா இன்பங்களையும் பெற்று வாழ்கிறார்கள்,”

என்று, 5—9—54 ஞாயிறன்று, [illegible]ல்லடத்தில் நடைபெற்ற சேலம் மாவட்ட உழவர் மாநாட்டின் பேசுகையில் தோழர் அ. பொன்னம்பலனார் குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் பேசியதாவது:—

“இந்த நாட்டில், வாழ்வில் பற்றற்று இருக்க வேண்டும் என்று உபதேசம் செய்யும் மடாதிபதிகளே பெரும் பெரும் நிலப் பிரபுக்களாயிருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் மேனி வாடாது வாழவும், உழைக்கின்ற உழவர்கள் உண்ண மூன்று வேளை உணவும் கிடைக்காது சலிக்கவும் ஆன நிலைகள் இனியும் இந்த நாட்டிலே நீடிக்கலாமா?

நிலங்கள், அவற்றை உழுது பயிரிடுபவர்களுக்குச் சொந்தமில்லாவிட்டால் அவன் எப்படி உழைப்பதில் பெருமை கொள்ள முடியும்?

உழைப்பதற்காக அவனுக்குக் கிடைக்கிற சிறு ஊதியம், அவனது பெரும் குடும்பத்தைக் காப்பாற்ற இயலாததாக இருக்கிறது. இந்த நிலை மாறி, ‘உழுபவனுக்கே நிலம் சொந்தம்,’ என்ற நிலை பிறக்க வேண்டும்.

நாட்டு மக்களுக்கு உணவு தருபவர்கள் இந்த உழவர்கள் என்பதை எண்ணிக் கொண்டால், இந்த உழவர் பிரச்சினை எத்தனை முக்கியமானது என்பது தெரியும்.

அப்படிப்பட்ட உழவர்கள் உழைத்தும், வாழ முடியாது போனால், நாடு எப்படி நல்ல நாடாக இருக்க முடியும்?

தருமபுரங்களும், திருவாடுதுறைகளும், சாமியவர்களும், குன்னியூரார்களும் உழைக்காமலேயே, ஆயிரக்கணக்கான உழவர்களின் உழைப்பால் உல்லாசமாக வாழ அனுமதிப்பது நியாயமா?

சர்க்கார், இந்த நாட்டில் உள்ள நில உடைமைகளை எல்லாம் உழுபவர்களுக்குச் சொந்தமாக்கினால்தான் உழவர்களின் வாழ்வில் துன்பம் மறையும்; இன்பம் பிறக்கும்! இதை சர்க்கார் உடனடியாகச் செய்ய வேண்டும்.

உழவர் பெருமக்கள் தங்கள் உழைப்பால் பெறும் சிறு ஊதியம், பலரால் சுரண்டப்படுகிற நிலையும் இருக்கிறது.

தங்கள் உழைப்பை, எவரும் கட்டியும் எவ்வளவும் சுரண்டுவதற்கு எவரையும், எக்காரணத்தாலும் உழவர் பெருமக்கள் அனுமதிக்கக் கூடாது.

உழைப்பின் பலனை, உழைப்பவர்கள்தான் அனுபவிக்க வேண்டுமே அன்றி, தான் உழைத்துப் பிறனை உல்லாசமாக வாழ வழி செய்வதாக இருக்கக் கூடாது.

இதற்கு, அவர்கள், தங்கள் மீது திணிக்கப்பட்டிருக்கிற மதக் கருத்துக்களையும், மூடப் பழக்க வழக்கங்களையும், சடங்குகளையும் விட்டொழிக்க வேண்டும்.

கடவுள் பெயரால், புராணத்தின் பெயரால் தங்கள் உழைப்பைப் பிறர் கொள்ளையிட்டுச் செல்லவும் அனுமதிக்கக் கூடாதென்பதையும் அவர்கள் மறந்துவிடக் கூடாது.

உழவர் பெருமக்கள் இம் மாதிரி மாநாடுகள் மூலம், ‘நாம் வாழப் பிறந்தோம்; அந்த வாழ்வைப் பெறுவோம்,’ என்ற உறுதி பெற்று, உயர வேண்டும்.

தி. மு. கழகம் தன்னால் ஆனவரை உழவர்கள் வாழ்வு உயரச் செய்யப் பாடுபடும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.”

தி. மு. க. பொதுச்செயலாளர்

**அண்ணாதுரை**

சுற்றுப்பிரயாண நிகழ்ச்சி

15—9—54: மரக்காணம்: காலை திருமணம்

16—9—54: திருவண்ணாமலை: காலை திருமணம்
மேல்ச்சமங்கலம்: மாலை திருமணம் ;
சேத்துப்பட்டு: மாலை $6\frac{1}{2}$ மணிக்கு தி. மு. கழகப் பொதுக்கூட்டம்

### செங்கற்பட்டுக்கு புதிய கலெக்டர்

செங்கற்பட்டு ஜில்லா கலெக்டராக லோபோ பிரபு நியமிக்கப் பட்டுள்ளார்.

# தூத்துக்குடி சதி வழக்கு விசாரணை

## மேலும் பலர் சாட்சியம்

27—8—54-ல், செல்லை அடிஷனல் செஷன்ஸ் நீதிபதி திரு. ராதாகிருஷ்ண முதலியார் முன்னிலையில், தூத்துக்குடி சதி வழக்கின் தொடர் விசாரணை முற்பகல் 11 மணிக்கு மீண்டும் ஆரம்பமாயிற்று.

முதலாவதாக, சர்க்கார் தரப்பில், கருப்பசாமி பண்ணையார் சாட்சியாக விசாரணை செய்யப்பட்டார். 42, 45-வது எதிரிகளை சாட்சி கோர்ட்டில் அடையாளங் காட்டினார்.

சாட்சியை, எம். செல்லப்ப பிள்ளை குறுக்கு விசாரணை செய்தபொழுது சாட்சி கூறியதாவது:—

"நான் 10 வருடமாக புதுக்கிராமத்தில் மளிகைக் கடை வைத்திருக்கிறேன்; மாதம் 40 ரூபாய் கிடைக்கும்; இன்ஸ்பெக்டர் என்னை ஒரு வாரம் கழித்து, இந்த வழக்கு விஷயமாக விசாரித்தார்; அதற்கிடையில், நான் பார்த்த விஷயங்களை ஒருவரிடமும் சொல்லவில்லை; கணேசய்யர் (மற்றொரு சாட்சி) கட்டடத்தில்தான் கடை வைத்திருக்கிறேன்; இன்ஸ்பெக்டர் விசாரணைக்குமுன், கணேசய்யரை நான் சந்திக்கவில்லை; சர்க்கிள் இன்ஸ்பெக்டர் விசாரிக்கும்பொழுது, எதிரிகளின் அங்க அடையாளங்களை நான் கூறவில்லை; 1½ மாதம் கழித்துத்தான் நான் அடையாளம் காட்டினேன்; இனம் காட்டும் வரைக்கும், அடையாளங் காட்டிய எதிரிகளைப் பற்றி எனக்குத் தெரியாது; புதுக் கிராமத்தில், ஒ. பி போலீஸ் நிலையம் இருக்கிறது; அடையாளம் காட்டிய எதிரிகள், சம்பவ தினத்தன்று என்ன உடை அணிந்திருந்தார்கள் என்று தெரியாது; தூத்துக்குடி மில்லில் ஒரு வருடம் வேலை பார்த்தேன் என்று கீழ்க் கோர்ட்டில் சொன்னது ஞாபகமில்லை; 45-வது எதிரி மில்லில் வேலை பார்ப்பது எனக்குத் தெரியாது; கீழ்க் கோர்ட்டில், 45-வது எதிரியும் வேலை பார்த்தார் என்று கூறியிருக்கிறேன்; இன்ஸ்பெக்டர் விசாரணையில், கூட்டத்தில் வந்தவரைப் பார்த்தால் தெரியும் என்று கூறியிருக்கிறேன்; வக்கீல் கணேசய்யர் அடிக்கடி எனது கடைக்கு வருவார்; என்னிடம் பேசுவார் என்று கீழ்க்கோர்ட்டில் நான் சொன்னதாக ஞாபகமில்லை; போலீசார் என்னை கூட்டிக் கொண்டு போனார்கள்."

வழக்கறிஞர் வி. என். கந்தையாவின் குறுக்கு விசாரணைக்கு சாட்சி கூறியதாவது:—

"அடையாளம் காட்டிய எதிரிகளை, நான் சம்பவத்துக்கு முன்னால் பார்த்ததில்லை; 45-வது எதிரியின் மீசையை அடையாளமாக நான் இன்ஸ்பெக்டரிடம் சொல்லவில்லை; நான் காங்கிரஸ் மெம்பர் இல்லை."

வக்கீல் சிதம்பரம் குறுக்கு விசாரணைக்கு சாட்சி கூறியதாவது:—

"கூட்டத்தில் யாரும் கம்பு வைத்திருந்தார்களென்று இன்ஸ்பெக்டர் விசாரணையில் சொல்லவில்லை."

★

இரண்டாவதாக, கிருஷ்ணன் ஆச்சாரி, சர்க்கார் தரப்பில் சாட்சியாக விசாரிக்கப்பட்டார். 15-வது எதிரி சண்முகக்கனியை சாட்சி கோர்ட்டில் அடையாளம் காட்டினார்.

குறுக்கு விசாரணையின்போது சாட்சி கூறியதாவது:—

"சம்பவ தினத்தன்று 10 மணிக்குமேல் 10½ மணிக்குள், நான் வீட்டிற்குப் போனேன்; சம்பவ தினத்திற்கு 2½ வருடத்துக்கு முன்னாலேயே அந்த கடை வைத்திருக்கிறேன்; நானும், இன்னொரு வரும் கடையில் இருக்கிறோம்; கூட்டம் வடக்கு தள்ளி வரும்பொழுதே சத்தம் கேட்டது; சத்தத்தால் வீட்டை அடைத்துவிட்டார்களா என்ற விவரம் எனக்குத் தெரியாது; கீழ்க்கோர்ட்டில், கூட்டம் வரும் சத்தம் கேட்டே வீட்டு அன்னவர்கள் வீடுகளை அடைத்துவிட்டார்கள் என்று சொல்லியிருக்கிறேன்; இன்ஸ்பெக்டர், 1 வாரம் கழித்து என்னை விசாரணை செய்தார்; ஒருவன் கம்பு வைத்துக்கொண்டு கடையை அடைக்கச் சொன்னான் என்று அவரிடம் கூறியிருக்கிறேன்; எதிரியை, அப்பொழுது எனக்கு அடையாளம் தெரியாது; இன்ஸ்பெக்டரிடம் அங்க அடையாளம் ஒன்றும் சொல்லவில்லை; இன்ஸ்பெக்டர், என்னிடம் எதிரி பற்றி அடையாளம் தெரியுமா என்று கேட்டார்; தெரியாததினால் அவரிடம் நான் கூறவில்லை, இன்ஸ்பெக்டர் விசாரணைக்கு 1 மாதத்திற்குப் பிறகுதான் அடையாளம் காட்டினேன்; போலீசார் தான், இனம் காட்ட, என்னை கூட்டிக்கொண்டு போனார்கள்; அப்பொழுது புதுக் கிராமத்தில் போலீஸ் ஸ்டேசன் இருந்தது; கடையை அடைக்கச் சொன்னவன் என்ன உடை அணிந்திருந்தான் என்றும் எனக்குத் தெரியாது; சம்பவத்தன்று நான் வக்கீல் கணேசய்யருடன் பேசிக்கொண்டிருந்தேன்; வக்கீல் கணேசய்யரை நான் அடிக்கடி சந்தித்துப் பேசினேன் என்று கீழ்க் கோர்ட்டில் கூறியிருப்பது ஞாபகமில்லை; கீழ்க் கோர்ட்டில், 'என்னை ஒருவன் கடையை அடைக்கச் சொன்னான்,' என்று சொன்னது ஞாபகமில்லை; கருப்பசாமி பண்ணையார் (மற்றொரு சாட்சி) கடையை அடைக்கச் சொல்லவில்லை."

★

மூன்றாவதாக, ராமகிருஷ்ண பிள்ளை, சர்க்கார் தரப்பு சாட்சியாக விசாரிக்கப்பட்டார்.

குறுக்கு விசாரணையில் சாட்சி கூறியதாவது:—

எனது காரிலிருந்தவர்களிடம் நான் பேசவில்லை; காரிலிருந்தவர்களை நான் அடையாளங் காட்ட முடியாது.

★

நான்காவதாக, சர்க்கார் தரப்பில், சுப்பையாக் கோனார் சாட்சியாக விசாரிக்கப்பட்டார்.

சாட்சி, குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

☆

5-வது சாட்சியாக சர்க்கார் தரப்பில் தங்கராஜ் விசாரிக்கப்பட்டார்.

5, 42, 43-வது எதிரிகளை சாட்சி கோர்ட்டில் அடையாளம் காட்டினார்.

குறுக்கு விசாரணையின்போது சாட்சி கூறியதாவது:—

"சம்பவ காலத்தில் எனக்கு வேலை உண்டு; விவசாயம்; சொந்த ஊர் மணியாச்சி; தூத்துக்குடி வந்து 4 வருடங்கள் ஆகின்றன; பிறகு கடைகளுக்கு பிறகு 'சப்ளை' பண்ணுவேன்; பிறகு கடை கணக்கெழுதினால் என் பெயர் அலங்கும்; தங்கசாமி நாடார் கடையில், வி. இ ரோடில் இருக்கும் கடையில் வியாபாரம் செய்திருக்கிறேன்; அடையாளங்காட்டிய 5, 42, 43-வது எதிரிகள் எனக்கு 8 வருடகாலமாகத் தெரியும்; கீழ்க்கோர்ட்டில், இந்த வழக்கு விஷயமாக விசாரித்தபொழுது இந்த எதிரிகள் கோர்ட்டில் இருந்தார்கள்; கீழ்க்கோர்ட்டில், 5-வது எதிரியைப் பற்றி நான் ஒன்றுமே சொல்லவில்லை; 5-வது எதிரி நடராசனை கீழ்க்கோர்ட்டில் அடையாளம் காட்டவுமில்லை; அதேமாதிரி 42, 43-வது எதிரிகளையும் நான் பெயர் சொல்லவில்லை; அடையாளமும் காட்டவில்லை; கீழ்க்கோர்ட்டில் ஒருவரையும் இனம் காண்பிக்கவில்லை; இன்ஸ்பெக்டர் என்னை 10 நாட்கள் கழித்து விசாரித்தார்; இன்ஸ்பெக்டர் விசாரிக்கும்பொழுது, 42, 43 எதிரிகளின் பெயரை நான் சொல்லவில்லை; ஜின்பாக்டரி சந்திப்பில் கூட்டம் வரும்பொழுது நான் வீட்டுக்குப் போகவில்லை; கீழ்க் கோர்ட்டில், கூட்டம் வரும் பொழுது வீட்டுக்கு போய்விட்டேன் என்று சொன்னேன்; கீழ்க்கோர்ட்டில், கூட்டம், புதுக்கிராமம் போனதாகச் சொல்லவில்லை; நான், ஒரு கட்சியையும் சேர்ந்தவனல்ல; நான் என் தகப்பனாருடன்தான் இருக்கிறேன்; காடு கரைகளெல்லாம் சேர்த்து 22 சங்கிலி நிலங்கள் எங்களுக்கு இருக்கின்றன; என் தகப்பனார் மில் ஸ்டோர் கீப்பருக்கு பியூனாக வேலை பார்க்கிறார்; எங்கள் நிலத்தில் அதிகமாக உடைமரங்கள்தான் உண்டு; பொன்னையா பண்ணையாரை சந்திக்கப் போனதாக இன்ஸ்பெக்டரிடம் சொல்லியிருக்கிறேன்; கீழ்க் கோர்ட்டில், 'நான் சும்மா இருக்கிறேன்,' என்று சொல்லவில்லை; தூத்துக்குடி கோராசாமி நாடார் எனக்குத் தெரியாது; மார்க்கெட் நிலைமையைப் பொறுத்து விறகு விலை உண்டு; எனக்கு, டன் கணக்கும், அதனா கணக்கும் தெரியாது."

சர்க்காரின் குறுக்கு விசாரணைக்கு, சாட்சி, கீழ்க்கோர்ட்டில் நான சாட்சி சொன்னால், தலையை எடுத்து விடுவோம் என்று தானமுத்து, ராமப்பன், கிருஷ்ணன் ஆகியோர் வந்து எனக்கு பயம் காட்டினார்கள்; அதனால்தான் நான் சாட்சி சொல்லவில்லை என்று கூறினார்.

### வ. உ. சி. வாசகசாலை திறப்பு விழா

சேலூர்—சேலத்தில் 29-8-54 காலை 9 மணிக்கு வ. உ. சி வாசகசாலை திறப்புவிழா தோழர் வி. ஏ. இராமநாதன் தலைமையில் நடைபெற்றது. ஆசிரியர் அழகிரிசாமி வீரவுரையாற்றினார். பல தோழர்களால் வாசகசாலைக்குப் புத்தகங்கள் அன்பளிப்பு அளிக்கப்பட்டன. ஊர் பொதுச் சாவடியை வாசகசாலைக்கு இலவசமாக கொடுத்து உதவிய பிரமுகர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்ளப்பட்டது. குழந்தைகளுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

* * *

28—8—54 இரவு 11 மணிக்கு வாசகசாலை நிர்வாகிகள் தேர்தல் தோழர் வே. து இராமநாதன் தலைமையில் நடைபெற்றது. தலைவர்: எம். கருப்பண்ணன்; துணைத் தலைவர்: பி. மோர்மன்னன்; செயலாளர்: டி. பி. நாராயணன்; பொருளாளர்: என். நாச்சிமுத்து; செயற்குழு உறுப்பினர்கள்: கே. காசிலிங்கம், பி. ஆண்டியப்பன், பி. சிவலிங்கம், ஏ. அருணாசலம், சிங்காரம்.

### பாண்டியன் நினைவுப் படிப்பகம்

இராமேஸ்வரம், செப். 6—

1—9—54ல், மேற்படி படிப்பகத்தின் உறுப்பினர்கள் கூட்டம், அலுவலகத்தில், தோழர் எஸ். நடராஜ் தலைமையில் நடைபெற்றபோது, தோழர் முத்தையா மறைவுக்கும், காஞ்சி—கல்யாணசுந்தரம் புதல்வரின் மறைவுக்கும் அனுதாபம் தெரிவிக்கப்பட்டது; திரு—கொச்சி தமிழ்ப் பகுதியில் சர்க்காரின் அடக்குமுறையைக் கண்டித்துத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### நாகையில் பொதுச் செயலாளர்

போதுக் கூட்டத்தில் தோழர்கள் சொற்பொழிவு

நாகப்பட்டினம், செப். 4—

நாகப்பட்டினம் தி. மு. கழகச் சார்பில், அவுரித் திடலில், நேற்று மாலை 7 மணி அளவில் ஓர் மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு தோழர் மாப்பையன் தலைமை தாங்கினார்.

தோழர் கே. கே. நீலமேகம் அவர்கள் சிறிது நேரம் பேசிய பின், தோழர் அ பொன்னம்பலனார் நீண்டதோர் சொற்பெருக்காற்றினார்.

அடுத்து, தி. மு. கழகப் பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்கள் அரியதோர் கருத்துரை ஆற்றினார்.

அண்ணா அவர்கட்கு நாகை தி. மு. கழகம், மாணவர் தி. மு. கழகம், பகுத்தறிவுப் படிப்பகம் ஆகியவற்றின் சார்பில் வரவேற்பு இதழ்கள் வாசித்தளிக்கப்பட்டன. நாகையில், படித்த வேலையில்லாதோர் சங்கம், செற்றிலை வியாபாரிகள் சங்கம், அழகிரி சொற்பயிற்சி மன்றம், பள்ளி மாணவர் மன்றம் ஆகியவற்றின் சார்பிலும், நாகை வட்டத்தில் உள்ள நாகூர், அப்பகல்லூர், சிக்கல், பொருள்வை, வேளூர், கூத்தூர், ஊராணி, குருக்கத்தி, வெங்கிடங்கால், உத்தமசோழபுரம், சோழங்கநல்லூர், மேலவாழக்கரை, வேழைபூர், பாலை, பொய்கைநல்லூர், இன்னபிற சிற்றூர்களில் உள்ள தி. மு. கழகக் கிளைகளின் சார்பிலும் மலர்மாலைகளும் கைத்தறியாடைகளும் அணிவிக்கப்பட்டன.

பொதுச்செயலாளர் அண்ணா அவர்களின் வருகையை ஒட்டி நகரின் முக்கியமான எல்லா வீதிகளும் வரவேற்பு வளைவுகளாலும் கழகக் கொடிகளாலும் தோரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன.

கூட்டம் முடிவுற்றதும், அண்ணா அவர்கள், நாகை தி. மு. கழகக் கட்டிடத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார். கழக சம்பந்தமான எல்லா நடவடிக்கைகளுக்கான தஸ்தாவேஜுகளும் பொதுச் செயலாளர் பார்வைக்கு வைக்கப்பட்டன.

"கழகக் கட்டிடம் ஒரு சிறு கல்லூரியாகவே காட்சி தருவதுடன், தி. மு. கழகம் பற்றியும், திராவிட நாடு பற்றியும் எல்லா விபரங்களும் அறிந்துகொள்ள முடிகிறது, கழகக் கட்டிடத்தில்,"

என்று பொதுச் செயலாளர் பாராட்டினார் கழகக் கட்டிடம் அவ்வளவு சிறப்பாக அமைந்திருக்கிறது. (ந-நி.)

### "குறள் நெறி" விரிவுரை

திருச்சி, செப். 7—

3—9—54 மாலை 5½ மணிக்கு சங்கரன் முன்னேற்றத் தனிப் பயிற்சிக் கூடம் மன்றத்தில் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் திரு கோ. இரத்தினம் அவர்கள் தலைமையில், தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் "குறள் நெறி" என்ற பொருள் பற்றி விரிவுரை நிகழ்த்தினார். நகரில் உள்ள உயர்நிலைப் பள்ளி, கல்லூரி மாணவர்கள் திரளாக வந்திருந்தனர்.

கல்லூரித் தலைவர் திரு என். ஜே தேவதாஸ் வரவேற்புரையாற்றினார்.

தலைவர், இன்றைய கல்வி நிலை, திருவள்ளுவர் அளித்த குறளின் சிறப்பு, மாணவர்களின் கடமை என்பது பற்றிப் பேசினார்.

பின்னர், தோழர் நெடுஞ்செழியன் அவர்கள், எளிய, இனிய நடையில் பொருள் செறிந்த விளக்கத்துடனும், உவமை நயத்துடனும் "குறள் நெறி" பற்றி 2 மணி நேரம் சொற்பொழிவாற்றினார்.

### சவுந்திரபாண்டியனார் பகுத்தறிவு மன்றம்

தாராவி, (பம்பாய்) செப். 4—

1—9—54 மாலை தோழர் க. வள்ளிநாயகம் தலைமையில் நடைபெற்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் கீழ்வருபவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:- மா. இரா. குறள்தாசன்—செயலாளர்; ஏ. எஸ். ஆசீர்வாதம்—துணைச் செயலாளர்; டி. வி. துரை—பொருளாளர்; செயற்குழு உறுப்பினர்கள்: சா. தர்மராசன், ம. இரா. ஏ. ரெத்தினசாமி, ஜி. இராசாமணி, எம். பன்னீர்வாயா, எம். பாண்டியன், இரா. தர்மராசன், வடகைக்குயில் செ. காபிரியேல்.

### திருமணங்கள்

26—8—54 காலை 9 மணிக்கு, நாகூரில், தோழர் ஜி. ஏ. ராமலிங்கத்திற்கும்-தோழியர் யஷ்ணவல்லிக்கும் திருமணம் நடைபெற்றது. மணமக்களுக்கு நண்பர்களால் ஏராளமான பரிசுகள் வழங்கப்பட்டன. திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ 1 அன்பளிப்பாக அளிக்கப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றியுரியது—பொறுப்பாளர்.

* * *

30—8—54 காலை 9-30 மணியளவில், நிலக்கோட்டையில், தோழியர் இராசாமணிக்கும் — தோழர் மாணிக்கத்திற்கும் தோழர் அ. மாரியப்பா தலைமையில் திருமணம் நடைபெற்றது. தோழர்கள் மு. சையது இப்ராகிம், அ. திராவிட ராசாராம், மாயவரம் ஆர். பழனிச்சாமி, பா. வடமலைராசன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். மணமக்களை வாழ்த்தி தோழர்கள் மு. கருணாநிதி, அரு பெரியண்ணன், கா.சதானந்தம் ஆகியோரிடமிருந்தும், மற்றும் பலரிடமிருந்தும் வாழ்த்துத் தந்திகளும் வாழ்த்துச் செய்திகளும் வந்திருந்தன. மணமகன் சார்பாக திராவிட முன்னேற்ற இளைஞர் கழக வளர்ச்சிக்கு ரூ. 3 நன்கொடை அளிக்கப்பட்டது. இத்திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிக்கப்பட்டது-வரப்பெற்றோம்-நன்றியுரியது—பொறுப்பாளர்.

• • •

2—9—54 காலை 9 மணிக்கு சேலம் சந்திப்புச் சாலையில் உள்ள தே. வி. க. வ. கட்டிடத்தில், திராவிட இயக்கத் தோழர் ரோசு அருணாசலம் அவர்கள் புதல்வன் தோழர் ராமமூர்த்திக்கும், தரையூர் திரு. கி. கு. ராமசாமி அவர்கள் புதல்வி தோழியர் தனலட்சுமிக்கும் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றது. நகரப் பெருமக்கள் புதுமணத் தம்பதிகளை பாராட்டிப் பேசினர்.

• • •

3—9—54ல், குளியமுத்தூர் தோழர் க. நடராசன்—தோழியர் ருக்குமணியம்மையாரை துணைவியாக ஏற்றார். நண்பர்களும், உறவினரும் ஏராளமான பரிசுகளை மணமக்களுக்குத் தந்தனர். மணமகன், குளியமுத்தூர் தி. மு. கழக வளர்ச்சிக்கு ரூ 2 நன்கொடை தந்தார்.

• • •

3-9-54ல், வெள்ளையக்குப்பம் கே. இராமச்சந்திரன் இல்லத்தில் தோழர் கே. கோபால்—தோழியர் கிருஷ்ணவேணி வாழ்க்கை ஒப்பந்தம் திருக்குறளார் வி முனுசாமி, எம்.பி. அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மணமக்களைப் பாராட்டி தோழர்கள் ஏ கோவிந்தசாமி எம் எல் ஏ; கே. ஜி சாமிநாதன், எஸ். கே. சம்பந்தம், வி. முனுசாமி (விருத்தாசலம்), சாம்பசிவம் முதலியோர் வாழ்த்துரை வழங்கினர். இதன் நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ 1 அன்பளிப்பாக அளிக்கப்பட்டது — வரப்பெற்றோம்—நன்றியுரியது—பொறுப்பாளர்.

# நிலப் பிரபுக்களின்.............

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தொழில் முன்னேறி, நல்ல பலன் தரும்,—இலாபம் தரும் தொழிலாக மாற, முதலாவதாக, அந்தத் தொழில் தற்கால விஞ்ஞான அறிவுடன் செய்யப்பட வேண்டும்; இரண்டாவதாக, இன்று, உழவர் பெருமக்களுக்கு உழவுத் தொழிலில் அக்கரை இல்லை; அந்த அக்கரை அவர்களுக்கு வரும்படி செய்ய வேண்டும். இந்த இரண்டும் செய்தால்தான் உழவுத் தொழில் ஈடேற முடியும்; நாடு முன்னேற்றத்தைக் காண முடியும்.

"உழவர்களுக்கு அக்கரை இல்லை என்பதை இனியும் மூடி மறைத்துப் பயனில்லை; உழவுத் தொழிலில் இருந்த அக்கரை இப்போது குறைந்துவிட்டது. நான் இப்படிச் சொல்லும்போது, உழவர்கள் எல்லோரும் ஏதோ உழைக்காத சோம்பேறிகளாக மாறிவிட்டார்கள் என நான் கூறுவதாக யாரும் எண்ணிவிட வேண்டாம். எப்படி அவர்களுக்கு அக்கரை குறையாமலிருக்க முடியும்?

"ஒரு சிறு வெற்றிலைப் பாக்குக் கடை வைத்திருப்பவன் கூட, தங்களிலும் சற்று உயர்ந்த வாழ்வு பெற்றிருப்பதைப் பார்க்கிறார்கள்; தங்களைக் காட்டிலும் குறைந்த அளவு உழைக்கும் பலர், பல வழியிலும் சற்று வசதியான வாழ்வு பெற்றிருப்பதைக் கண்டு புழுங்குகிறார்கள்;—அதாவது, உழவுத் தொழில், வாழ்வுக்கும் பாதுகாப்புடைய தொழிலாக இல்லை; உழவுத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்குப் போதுமான வாழ்க்கை வசதிகள் தரப்படவில்லை—இதை எண்ணும்போது, உழவர்களுக்கு, தங்கள் தொழில்மீது வெறுப்பேற்படுவது இயற்கைதானே!

"இரண்டாவதாக, உழவர்கள் ஆண்டு முழுதும் உழைக்கிறார்கள்; உழுது, பண்படுத்தி, பரம்படித்து, விதைத்து, நீர் பாய்ச்சி, களை எடுத்து, காவல் புரிந்து, பயிர் வளர்க்கிறார்கள்; அவர்கள் உழைப்பால் உயர்கிறது நெற்கதிர்; பார்க்கிறார்கள்—பெருமூச்சு விடாமலா இருக்க முடியும்?

"'கதிர்கள் தலை தாழ்த்தி ஆடுவது, எம்மால்; எம் உழைப்பால்; ஆனால், அந்தக் கதிரில் உள்ள நெல் மணிகள் நாளை நமக்கா வரப்போகின்றன? எங்கோ இருக்கும் நிலப் பிரபுக்கு, அவர் வீட்டுக் களஞ்சியத்திற்குத்தானே போகப் போகிறது'—என்ற எண்ணம் தோன்றும்போது, 'உழைப்பின் பலன் நமக்கில்லை; இன்னொருவனுக்குத்தான்,'—என்று எண்ணும்போது, உழவர்கள், அந்தத் தொழிலில் அக்கரை காட்டவா முடியும்?

"இனி அவர்களுக்கு, தொழிலில் அக்கரை வளர இரண்டு நல்ல காரியங்களைச் செய்தாக வேண்டும்—ஒன்று, வேறு பல தொழில்களில் கிடைக்கும் பாதுகாப்பு, இந்தத் தொழிலுக்கும் கிடைக்க திட்டம் தீட்டியாக வேண்டும்: இரண்டாவதாக, உழுகிறவர்களுக்கு நிலம் தரப்பட வேண்டும்.

"நிலச் சீர்திருத்தம் பற்றி சர்க்கார் யோசித்து வருவதாக அடிக்கடி பேசப்படுகிறது; யோசிக்கட்டும், சர்க்கார், நன்றாக! ஆனால், பல யோசனைகளில், இதையும் ஒன்றாக வைத்துக்கொள்ளக் கூடாது.

"இருசாராருக்கும்—நிலப் பிரபுவிற்கும் உழவர்களுக்கும்—மோதுதல் ஏற்படுகிற வகையில் சர்க்கார் பிரச்சினையை ஒத்திப் போட்டுக்கொண்டே செல்லக்கூடாது; இவர்கள் இருவரையும் மோதவிட்டு ஓட்டு வேட்டையாடுவதிலேதான் காங்கிரஸ் சர்க்கார் கவனமாயிருக்கிறது என்று எண்ணுகிறேன்; அல்லது, 'இந்த நிலப் பிரச்சினைதான் என்றாவது வருவது வரத்தானே போகிறது; அதுவரையில், தள்ளுகிற வரையில் காலம் தள்ளலாம்,' என்று எண்ணும் இரண்டுங்கெட்டான் நிலையில் இருக்கிறதோ என்னவோ, சர்க்கார்!

"ஆனால், ஒன்று மட்டும் சர்க்காரின் கவனத்திலிருக்க வேண்டும்—தஞ்சை மாவட்டத்தில் உழவர்களுக்கும், நிலப் பிரபுக்களுக்கும் இடையே தோன்றிய நிலைகள், மற்ற மாவட்டங்களிலும் வராமுன்னம், பிரச்சினை கவனிக்கப்பட வேண்டும்!

"நிலப் பிரபுக்களைப் பார்க்கும்போது அவர்களுக்குச் சமாதானமும், உழவர்களைக் காணும்போது, அவர்கள் உள்ளம் குளிரப் பேசுவதும் கூடாது.

"சர்க்கார், இரண்டு தரப்பினரையும் கூப்பிட்டு வைத்து, நிலப் பிரச்சினைக்கு ஒரு நல்ல முடிவை சீக்கிரமே மேற்கொள்ள வேண்டும்.

"நிலங்களை விவசாயிகளுக்குப் பிரித்துத் தந்தால் மட்டும் போதாது; பிரித்துத் தரப்படுகிற நிலங்களை கூட்டுப் பண்ணை முறையில் பயிரிட்டால்தான் எல்லா விவசாயிகளும் நல்லதோர் பலன் காண முடியும்; அந்த வகையில், சிறு, சிறு நிலப்பரப்பைச் சொந்தமாக உடைய விவசாயிகளை, கூட்டுப் பண்ணை முறையில் ஒன்றுகூட்டி, அந்தப் பண்ணை நிர்வாகத்தை வேண்டுமானால் அனுபவம் பெற்றவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட சம்பளம் கொடுத்துப் பார்க்கச் சொல்லலாம்; அதன் மூலம், இந்த விவசாயத் தொழிலில் அவர் பெற்றிருக்கிற நிபுணத்துவத்தையும் நாம் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

"நிலங்களை உழவர்களுக்குப் பிரித்துத் தந்துவிடுவதாலேயே வறுமை போய்விடுமென்பதல்ல; நிலம் பிரித்துத் தரப்படுமென்பதின் மூலம், உழவர்களுக்கு, தொழிலில் அக்கரை வளரும்.

"அந்த அக்கரையுடன், விஞ்ஞான அறிவும் தரப்பட்டால், தொழிலில் நல்ல பலன் கிடைக்கும்; அப்போதுதான் வறுமை ஒழியும்!

"இவற்றைச் செய்ய, ஒரு நல்ல அக்கரை கொண்ட சர்க்கார் வேண்டும்; இங்குள்ள காமராசர் சர்க்காருக்கு, அக்கரைகூட இந்த விஷயத்தில் இருக்கலாம்; ஆனால், அதிகாரமில்லாத சர்க்காராக இருக்கிறது!

"நேருவின் தலைமையில் உள்ள சர்க்காரோ, அதிகாரமிருந்தாலும்,

## கழகக் கூட்டம்

☆

## திருமணி

தி. மு. கழக துவக்கவிழா
11—9—54 சனி மாலை
பேசுவோர்:
என். வி. நடராசன்
போளூர் கே. சுப்ரமணியம்

# கந்துபாய் தேசாய்-புதிய தொழில் அமைச்சராகிறார்!

புதுடில்லி, செப். 8—

இந்திய ஜனாதிபதி ராஜேந்திர பிரசாத், இந்திய சர்க்காரின் தொழில் இலாகா அமைச்சராக கந்துபாய் காசான்ஜி தேசாயை நியமித்திருக்கிறார். இதற்கான அறிவிப்பு ஒன்று வெளியிடப்பட்டிருக்கிறது.

தேசாய், காங்கிரஸ் தொழிலாளர் நடத்தப்படும் இந்திய தேசிய தொழிற் சங்கக் காங்கிரசின் முன்னாள் தலைவராவர். வி. வி. கிரி அவர்களுக்குப் பின்னர் ஒரு தொழிலாளர் தலைவரே தொழில் இலாகா அமைச்சராக நியமிக்கப்பட வேண்டுமென்ற நோக்கத்துடன் இந்திய சர்க்கார் இவரைத் தேர்ந்தெடுத்தனர் என்று தெரிகிறது.

46 வயதான தேசாய், சூரத்தைச் சேர்ந்த பல்சார் என்னும் நகரத்தைச் சேர்ந்தவர் எனத் தெரிகிறது.

☆

## மஜ்தூர் சபா எதிர்ப்பு

இந்த மஜ்தூர் சபாவின் நிர்வாகக் குழு உறுப்பினரான நாத் லர் ஷா, "பாங்கி அப்பீல் டிரிபூனல் தீர்ப்பில் கடைபிடிக்கும் கொள்கையை மாற்றிக்கொள்ள இந்திய சர்க்கார் ஒப்புக்கொள்ளாததற்கு முன், தேசாய், தொழிலாளர் இலாகா அமைச்சராகப் பதவி ஏற்றால், அது, தொழிலாளர்களைக் காட்டிக் கொடுப்பது போலாகும்," என்று ஆமதாபாத்தில் கூறியுள்ளார்.

☆

## சிப்பந்திகளுக்கு எச்சரிக்கை

பாங்கி சிப்பந்திகளின் பிரச்சினையில்தான் கிரி அவர்கள் இராஜிநாமா செய்திருக்கிறார்; ஆனால், இப்போது பதவி ஏற்க ஒப்புக்கொண்டிருப்பவர், இந்திய தேசியத் தொழிற் சங்கக் காங்கிரசின் முன்னாள் தலைவர்.

இப்போது, அக்காங்கிரசின் தலைவராக இருக்கும் எஸ். ஆர். வாசவதா, இந்திய சர்க்கார், உடனே ஒரு தனிக் குழு ஒன்றை நியமித்து, பாங்கித் தீர்ப்பை அமுல் செய்வதால் நாட்டின் பொருளாதாரத் துறையில் ஏற்படும் நிலையை ஆராய வேண்டுமென்று கூறி, பாங்கித் தொழிலாளர்கள் இப்பிரச்சினையில் வேலை நிறுத்தம் போன்ற நேரடி நடவடிக்கைகளில் இறங்குவது சரியானதாகாது என்றும் எச்சரித்துள்ளார்.

## சியாம் மந்திராலோசனை

ஜெனீவா, செப். 8—

சிறுவை சியாம் விமானங்கள் [illegible] பெருந்த அளவில் தாக்கியதைத் தொடர்ந்து, உயர்தர அதிகாரிகளின் அவசர மகாநாடு ஒன்றை ஜெனரல் சியாங்கே ஷேக் கூட்டினார். பேசப்பட்ட விஷயங்கள் அறிவிக்கப்படவில்லை.

# நாட்டிற்கு நன்மை செய்யாத.........

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

நான் எவ்வளவு தொல்லைகளுக்கு உட்பட்டேன் என்பதை நீங்கள் அறிவீர்கள். நிதி அமைச்சரும், பாதுகாப்பு இரயில்வே அமைச்சர்களும் தங்கள் கீழுள்ள தொழில்களுக்கு, அந்த மசோதாவில் விலக்கு அளிக்க வேண்டுமென்று எண்ணினார்கள். அவர்களின் இத்தகைய எதிர்ப்பு ஒரு குறிப்பிட்ட நோக்கத்துடன் இருக்கலாம்; ஆனால், இந்த எதிர்ப்பு எனக்கு மகிழ்ச்சியைத் தருவதாக இல்லை;

"ஒவ்வொருவரும், தங்களுக்கென தனியானதோர் தொழில் கொள்கையைக் கடைபிடிக்க விரும்புகின்றனர்; இதன் மூலம் தொழில் இலாகாவானது, ஒரு குறிப்பிட்ட தொழில் கொள்கையை அமுல் செய்ய இயலாது செய்யப்படுகிறது. நான், மற்ற தொழில் அதிபர்களுக்கு வழிகாட்டியாக சர்க்கார் இருக்க வேண்டுமென விரும்பினேன்' ஆனால், இந்த நிலை வரும் என்பதற்கான நம்பிக்கை, எங்கோ வெகு தூரத்தில் காணப்படுகிறது,"

—என்று, தொழில் இலாகா அமைச்சர் பதவியிலிருந்து விலகிய கிரி அவர்கள், பண்டித நேருவுக்கு எழுதியுள்ள தனது இராஜிநாமா கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

பாங்கித் தீர்ப்பு பற்றி இந்திய சர்க்காரின் போக்கை மாற்ற தான் எவ்வளவோ முயற்சித்தும் பலன் இல்லை என்பதை அவர் அக்கடிதத்தில் குறிப்பிட்டு, மேலும் கூறியதாவது:—

"இதுவரையில் சர்க்காரின் தொழில் கொள்கை, தொழிலாளர்களில் எல்லா பிரிவினருடைய பெருவாரியான ஒப்புதலைப் பெற்றிருந்தது; ஆனால், இப்போது நடைபெற்ற சம்பவங்களினால் சர்க்காரின் தொழில் கொள்கையில் ஒரு மாற்றம் ஏற்பட்டுவிட்டது என்பதை வருத்தத்துடன் ஒப்புக்கொள்கிறேன்.

"நாட்டிலே உள்ள எல்லா தொழிலாளர் சங்கங்களிலும், குறிப்பாக பாங்கி ஊழியர்களும், நான் என்னுடைய கடமையில் தவறிவிட்டேன் என்றும், மந்திரி சபையை நேரான பாதையில் அழைத்துச் செல்லத் தவறிவிட்டேன் என்றும் எண்ணுவார்கள். இப்படி அவர்கள் நினைக்க முடியும் என்று என் மனச்சாட்சி எனக்குச் சொல்கிறது...... அவசரப்படாமல் என் மனச்சாட்சியுடன் போராடி, நான் எடுத்திருக்கும் இந்த எனது இராஜிநாமா முடிவை தாங்கள் ஏற்றுக்கொள்வீர்கள் என்று நம்புகிறேன்."

தென்னாட்டவர் மீது அக்கரை இல்லாத சர்க்காராக இருக்கிறது!"

என்று பொதுச் செயலாளர் அவர்கள் குறிப்பிட்டுவிட்டு, நம் பிரச்சினைகளை நாமே கவனித்துக் கொள்ள நமக்கு எல்லா அதிகாரங்களுமுள்ள ஒரு நல்ல அக்கரை கொண்ட சர்க்கார் வேண்டும் என்பதைத் தெளிவாக விளக்கி, அந்த அதிகாரம் படைத்த—அக்கரை கொண்ட சர்க்காரை அமைப்பதே தி. மு. கழகத்தின் இலட்சியம் என்பதையும் விளக்கினார்.

சொற்பொழிவின் துவக்கத்தில் பொதுச்செயலாளர் அவர்கள் குறிப்பிட்டதாவது:—

"உழவர் தம் குறைகளை எடுத்துரைக்கவும், அவற்றிற்குப் பரிகாரம் காணவுமாகக் கூட்டப்பட்டுள்ள இந்த மாநாட்டில், என்னையும் கலந்துகொள்ளுமாறு கேட்டபோது, 'இந்த மாவட்டத்தின் பல பகுதிகளிலும் உழவர் கழகங்களைத் தோற்றுவித்து, அவர்களை எல்லாம் ஒரு பெரிய இயக்கமாக, ஸ்தாபன ரீதியாக ஒன்றுதிரட்டி, பின்னர் மாநாடு நடத்தலாமே?' என்று குறிப்பிட்டேன். ஆனால், 'மாநாட்டிற்குப் பிறகு, அதை நடத்த முடியும்,' என்று நண்பர்கள் கருதினார்கள். அந்த வகையில் இன்று நடைபெறும் இந்த மாநாட்டில் என்னைக் கலந்துகொள்ளச் செய்த நண்பர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தென்னாட்டு மக்கள் அனைவருக்கும் வாழ்வு தேவை என்ற திட்டத்தின் அடிப்படையில் இயங்கும் ஒரு அரசியல் இயக்கத்தைச் சார்ந்தவன் நான்; உழவர்களுக்கும், தொழிலாளர்களுக்கும், இங்குள்ள நிலப்பிரபுக்களுக்கும் மதிப்பு தர வேண்டியவர்கள் யார், பாட்டாளிகள் என்போருக்குமே வாழ்வு தர தன்னை ஒப்படைத்திருக்கிற தி. மு. கழகம், உழவர் பிரச்சினையில் கொண்டுள்ள கருத்தைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த மாநாட்டில் கலந்து கொள்வதாயிருந்த முதலமைச்சர் திரு காமராசர், ஒரு வாழ்த்து அனுப்பி இருக்கிறார்;

அந்த வாழ்த்து, ஆட்சியிலிருந்த ஆள்தானே மாறியிருக்கிறாரே தவிர, ஆட்சியின் பொருளாதாரத் திட்டங்கள் மாறவில்லை என்பதைத்தான் காட்டுவதாக இருக்கிறது!

இதுபோன்று நடத்தப்படுகிற எல்லா மகாநாடுகளுக்கும், எல்லா முதலமைச்சர்களும் அனுப்புகிற வழக்கமான வாழ்த்துச் செய்தியையே, காமராசரும் அனுப்பியிருக்கிறார்.

'மகாநாடு வெற்றிகரமாக நடைபெற வேண்டு'மெனக் குறிப்பிட்டுவிட்டு, 'உழவர்கள் நாட்டு முன்னேற்றத்திற்கு உழைக்க மகாநாடு பயன்பட வேண்டு'மென அவர் விருப்பு வருவதாகவும் வாழ்த்துச் செய்தி தெரிவிக்கிறது.

எங்கு சென்றாலும், 'நாட்டு முன்னேற்றத்திற்கு உழையுங்கள், உழையுங்கள்,' என்று, ஆட்சியாளர்கள் கூறுகிறார்களே, அந்த நாட்டு முன்னேற்றம்தான் என்ன?

உழவுத் தொழில் எந்த அளவு மேம்பாடுடையதாயிருக்கிறதோ எந்த அளவு முன்னேறி இருக்கிறதோ அதைப் பொறுத்திருக்கிறது, நாட்டின் முன்னேற்றம்!

அந்தத் தொழிலில், முன்னேற்றம் காண வழி செய்யாது, தொழில் கவனிக்கப் போக விட்டுவிட்டு, 'நாட்டு முன்னேற்றத்திற்கு உழையுங்கள்,' என்று கூறுவது என்ன நியாயம்?

நாட்டு முன்னேற்ற மென்பது, நட்டு வைத்துள்ள பூஞ்செடி போலவும், அதை வளர்க்க, 'ஆளுக்கொரு குடம் தண்ணீர் ஊற்றுங்கள்,' என்று கேட்பது போலவும், இருக்கிறது, ஆட்சியாளர் போக்கு!"

[illegible]